# தில்லி தொழிலாளர் போராட்டங்கள் குறித்து சந்தார் ஆட்டோமோடிவ் தொழிலாளர்கள்

இந்தியா, போலந்து, ஸ்பெயின் உட்பட பல நாடுகளில் சந்தார் நிறுவனம் ஆட்டோ உதிரி பாகனங்கள் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. சர்வதேச அளவில் சந்தார் நிறுவனம் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் வேளையில், சந்தார் தொழிலாளர்களான நாமும் நமது போராட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டியுள்ளது. சந்தார் நிறுவனம் மற்றும் அதனுடன் கூட்டு வைத்துள்ள மற்ற தொழிற்சாலைகளை பற்றிய ஒரு பார்வை இங்கே.

**சென்னை, ஓரகடம் பகுதியில் அருகே சந்தார் தொழிற்சாலை.**

இங்கு சுமார் 40 தொழிலாளர்கள் பணி செய்கின்றனர். அவர்கள் ராயல் என்ஃபீல்டு பைக்குகளுக்கு சக்கரங்களை இணைக்கின்றனர். ஒரு நாளைக்கு 430 சக்கரங்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இதற்கான உதிரி பாகங்கள் எம்.ஆர்.எஃப், பெம்ப்ரோ மற்றும் எக்ஸல் நிறுவனங்களிலிருந்து வருகின்றன. இங்கு நடக்கும் வேலை  ஒவ்வொரு சக்கரத்திலும் 40 செருகுகோலை மாட்டும் சலிப்பூட்டும் வேலையாகும். இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் டிப்ளமோ மெகானிக்ஸ் படித்தும் 2 வருடங்களுக்கு ட்ரெய்னியாக வேலை செய்ய வேண்டும். சனி, ஞாயிறு கூட வேலை செய்ய வேண்டியுள்ளது.

**பூனாவிற்கு அருகில் உள்ள சந்தார் தொழிற்சாலை**

பூனாவிற்கு அருகில் உள்ள சக்கான் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் 35 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அவர்கள் ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனிக்கு மாதம் சுமார் 2500 கேட் பூட்டுகள் தயாரிக்கின்றனர். 2012 ஆம் ஆண்டு கடைசியில் உற்பத்தி 3000 த்திலிருந்து தற்போது 2500ஆக குறைந்துள்ளது. ஓப்பந்த அடிப்படையில் பணி செய்த 20 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யபட்டுள்ளனர். தகர கூரை போட்டு அமைக்கப்பட்ட தொழிற்சாலை வெயிலில் வேலை செய்வது கடினமாக உள்ளது.

**தில்லிக்கு அருகில் சந்தார் தொழிற்சாலைகள்**

குர்காவ் அருகில் உள்ள துமாஸ்பூர் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் சுமார் 2000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அருகில் உள்ள கிரத் பிலாஸ்டிக்ஸ் தொழிற்சாலையில் சுமார் 500 தொழிலாளர்கள் சந்தார் நிறுவனத்திற்கு உதிரி பாகம் தயாரிக்கின்றனர. இத் தொழிற்சாலையில் ஹீரோ மோட்டர்சைக்கிள் கம்பெனிக்கு கண்ணாடி, மாருதி சுசுகி நிறுவனத்திற்கு ஸ்டியரிங் வீல், மற்றும் ஹோண்டா நிறுவனத்திற்கு உதிரி பாகம் உற்பத்திகள் நடைபெறுகின்றன.

வேலை செய்யும் 2000 தொழிலாளர்களில் சுமார் 1800 தொழிலாளர்கள் 2 ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒப்பந்த வேலை செய்கின்றனர். அவர்கள் 8 மணி நேர வேலை அடிப்படையில் மாதம் 5500 ரூபாய் ஊதியம் பெறுகின்றனர். 12 மணி நேர ஷிஃப்ட் வேலைகளில் வேலை செய்கின்றனர். ஆனால் ஹீரோ நிறுவனத்தில் தேவைகள் அதிகமானால் 2 மணி நேரம் அதிகம் வேலை செய்ய வேண்டும். 2007லிருந்து உற்பத்தி

அதிகமாகி வேலை பளு அதிகமாக உள்ளது. 2012 லிருந்து ஒரு அசெம்பிளி லைனில் 30 தொழிலாளர்கள் வேலை செய்வது 20 தொழிலாளர்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்களுக்கு வேலை பளு அதிகமானதுடன் தரமும் குறைந்துள்ளது.

அருகில் உள்ள மானேசர் மற்றும் குர்காவ் தொழிற்சாலைகளிலும் இதே நிலை தான் காணப்படுகிறது. மானேசர் தொழிற்சாலையில் சுமார் 700 தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கின்றனர். குர்காவ் தொழிற்சாலையில் சத்யம், ஓமாக்ஸ் நிறுவனங்களுக்கு பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவர்கள் மாருதி சுசுகி நிறுவனத்திற்கு உதிரி பாகங்கள் தயாரிக்கின்றனர். இங்கு உள்ள தொழி;லாளர்கள் மத்தியில் குறிப்பாக இளந்தொழிலாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. இங்கு நிர்வாகம் ஒவர்டைம் கொடுக்காததால் தொழிலாளர்கள் 12 மணி நேர ஷி்ப்ட் வேலையை செய்ய மறுத்துள்ளனர்.

பல தொழிலாளர்கள் சில நாட்களுக்கு பின்னர் இந்த வேலையை விட்டு விட்டு வேறு நிறுவனத்தில் வேலை தேடி செல்கின்றனர். ஆனால் மற்ற நிறுவனங்களிலும் அதே பிரச்சனையை சந்திக்கும் தொழிலாளர்கள் இதே நிறுவனத்திற்கு வேலை தேடி வரும் நிலைமையே. இதனால் எதுவும் செய்ய முடியாது என தொழிலாளர்கள் விரக்தி அடைகின்றனர். ஆனால் இப்பகுதிகளில் நாம் பார்த்தோமானால் பல வகைகளில் தொழிலாளர்கள் தங்கள் அதிருப்தியை வெளிகாட்டுகின்றனர்.

**ஹீரோ மோட்டர் சைக்கிள், குர்காவ் 2006**

இத்தொழிற்சாலையில் சுமார் 4500 தற்காலிக தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்ய கோரி 4 நாட்களுக்கு தொழிற்சாலையில் முற்றுகை போராட்டம் நடத்தினர். நிர்வாகம் அவர்களுடைய குடிநீரை ரத்து செய்து பின்னர் தொழிற்சாலைக்கு வெளியே பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை செய்ய கோரியது. பேச்சு வார்த்தைக்கு பின்னர், ஊதியத்தை மற்றும் உயர்த்திய நிறுவனம் மற்ற வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

**ஹோண்டா மோட்டார்சைக்கிள், குர்காவ் 2006**

தொழிலாளர் சங்கத்துடன் செய்யபட்ட ஒப்பந்தத்தில் தற்காலிக தொழிலாளர்களுக்கு எந்த ஒரு சலுகைகளும் கொடுக்கப்படாத நிலையில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் நிர்வாக உணவகத்தை முற்றுகை செய்தனர். அடுத்த ஷி்ப்ட் தொழிலாளர்கள் வெளியிலிருந்து ஆதரவு செய்த நிலையில் 5 நாட்களுக்கு பின்னர் நிர்வாகம் சில சலுகைகளை வழங்கியது.

**டெல்்பி, குர்காவ் 2007**

குர்காவ் பகுதியில் உள்ள கார் உதிரிபாக உற்பத்தி தொழிற்சாலையில் 2500 தற்காலிக தொழிலாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டு தொழிற்சாலை வாயில்களை யாரும் போகவிடாமல் தடுத்தனர். நிர்வாகம் நிரந்தர தொழிலாளர்களின் சங்கத்தை இதில் குறுக்கிட்டு வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்க செய்தது. 2007 ஆகஸ்ட் மாதம் குறைந்த பட்ச ஊதிய உயர்வை நிர்வாகம் கொடுக்க திரும்பவும் தற்காலிக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வெற்றியும் பெற்றனர்.

**ஹீரோ மோட்டர் சைக்கிள், தாருஹேரா 2008**

2008 மே மாதத்தில் நிரந்தரத் தொழிலாளர்களின் சங்கம் தற்காலிகத் தொழிலாளர்களை உறுப்பினர்களாக ஏற்றுகொள்ளாத போது, 2000க்கும் மேற்பட்ட தற்காலிக தொழிலாளர்கள் தொழிற்சாலையை 2 நாட்களுக்கு முற்றுகை செய்தனர். தொழிலாளர்கள் நிலையை மேம்படுத்துவதாக நிர்வாகம் உறுதியளித்த. பின்னர். தற்காலிக தொழிலாளர்கள் தங்களுக்கென்று சங்கத்தை பதிவு செய்ய முயன்ற போது தொழிலாளர்கள் தலைவர்கள் வேலை நீக்கம் செய்யபட்டு தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டது. இந்த தொழிற்சாலைக்கு துமாஸ்பு_ரில் உள்ள சந்தார் நிறுவனம் கண்ணாடி உற்பத்தி செய்து வருகிறது.

**பாஸ்ச், பூனா 2009**

மாருதி சுசுகி நிறுவனத்திற்கு பாகங்கள் தயாரித்து வரும் பாஸ்ச் நிறுவனத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் கோரி நீண்ட கால வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். நிர்வாகம் உற்பத்தியை மானேசர் தொழிற்சாலைக்கு மாற்றி தொழிலாளர் போராட்டத்தை நிறுத்து முயற்சி செய்தது. ஆனால் தொழிலாளர் போராட்டத்திற்கு பின்னர் ஒப்பந்த முறை கைவிடபட்டது ஆனால் தற்போதைய நிலவரம் தெரியவில்லை.

**நாபினோ ஆட்டோ, மானேசர் 2010**

நாபினோ ஆட்டோ நிறுவனம் ஹீரோ மற்றும் மாருதி சுசுகி நிறுவனங்களும் எலக்ட்ரானிக் பாகங்களை தயாரித்து வருகிறது. 2010 ஜுன் மாதத்தில் நிர்வாகம் ஒரு தொழிலாளரிடம் தகாத முறையில் நடந்து கொண்ட பின்னர் 600 நிரந்தரம் மற்றும் தற்காலிக தொழிலாளர்கள் 4 நாட்களுக்கு தொழிற்சாலையை முற்றுகை செய்தனர். மேலும் 200 தொழிலாளர்கள் வெளியில் இருந்து உணவு வழங்கி ஆதரவு கொடுத்தனர். 3 ஆண்டுகளில் 3500ருபாய் ஊதிய உயர்வு ஒப்பந்தம் செய்யபட்டு வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்டது. ஆனால் நிர்வாகம் உடனடியாக தொழிற்சாலையை மூடி சில தொழிலாளர்களை பணிநீக்கம் செய்தது. ஆனால் 2012க்கு பின்னர் மாருதி சுசுகியில் நடந்த கலவரத்திற்கு பின்னர் நிர்வாகம் தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு அமர்த்தி 50 தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரம் செய்தது.

**மாருதி சுசுகி, மானேசர் 2011-2012**

2011 ஜுன் மாதத்தில் சுமார் 2000 தற்காலிகம் மற்றும நிரந்தரத் தொழிலாளர்கள் 13 நாட்களுக்கு மானேசரில் உள்ள மாருதி சுசுகி தொழிற்சாலையை முற்றுகை செய்தனர். இவர்களுக்கு 1500 தொழிலாளர்கள் வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்தனர். முக்கிய கோரிக்கையான தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க மறுத்த நிர்வாகம் ஊதிய உயர்வு, தொழிலாளர்களின் குடும்பத்திற்கு மருத்துவ காப்பீடு, உற்பத்த நேரத்தை 45 செகன்டுகளிலிருந்து 1நிமிடத்திற்கு மாற்றுதல் போன்ற பல சலுகைகளை வழங்கியது. 2011 அக்டோபரில் தொழிற்சாலையை இழுத்து மூடுவதற்கு நிர்வாகம் முயற்சித்த போது, தொழிலாளர்களை அதை முறியடித்தனர். தொழிற்சங்கத்தை முறியடிக்கும் நிர்வாக முயற்சிகளினால் தொழிலாளர் அதிருப்தி நீடித்தது. 2012 ஜுலை 18 அன்று ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தொழிற்சாலையில் போராட்டத்தில் ஈடுபட்ட போது,

100 நிர்வாக மேலாளர்களுக்கு மருத்துவ உதவி தேவைபட்டது. தொழிற்சாலை தீ வைக்கப்பட்டது.

ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள் போராட்டங்களை மேற்கொள்ளும் போது மற்ற தொழிற்சாலைகளிலும் அது பாதிப்பை ஏறபடுத்துவதை நாம் காண்கிறோம். 2013 ஜுலை மாதத்தில் குர்காவ் தாருஹேராவில் உள்ள ஹீரோ தொழிற்சாலையில் 2 நாள் வேலை நிறுத்தம் செய்த போது, சந்தார் தொழிற்சாலையில் வேலை நேரம் 12 மணியிலிருந்து 8 மணிக்கு குறைக்கப்பட்டது அதே போல் சந்தார் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் ஹீரோ தொழிற்சாலையின் உற்பத்தியும் பாதிக்கப்படும். இது சர்வதேச உற்பத்தியிலும் காண முடிகிறது. 2009ல் குர்காவ் ரீகோ நிறுவனம் இழுத்து மூடபட்ட போது அமெரிக்காவில் போர்ட் மற்றும ஜெனரல் மோட்டர்ஸ் தொழிற்சாலைகளில் உற்பத்தி பாதிக்கபட்டது.

இவ்வாறு நடக்கும் பல போராட்டங்களிலிருந்து நாம் சில பாடங்கள் கற்க வேண்டும்:

தொழிலாளர்களின் கூட்டு முயற்சிக்கு நிர்வாகம் தங்களை தயார் செய்யும் நிலைமைக்கு விடாதீர்கள். நிர்வாகத்திற்கு உங்களுடைய பணி எங்கு மிகவும் தேவை படுகிறதோ அங்கு தொழிலாளர்கள் போராட்ட முயற்சிகயை செலுத்த வேண்டும்.

போராட்டத்தின் போது தொழிற்சாலையிலிருந்து வெளியே செல்லாதீர்கள் அதே சமயம் வெளியில் ஆதரவு திரட்டுங்கள்.

பேச்சுவார்த்தைக்கு ஒரு சில தலைவர்களை மற்றும் அனுப்பாதீர்கள். அவர்களை நிர்வாகம் பணம் கொடுத்து வாங்க முயற்சிக்கும் அல்லது அவர்களை பணிநீக்கம் செய்து பழிவாங்கும்.

நிரந்தரத் தொழிலாளர்கள், தற்காலிக தொழிலாளர்கள் என தொழிலாளர்களை பிரிக்கும் முயற்சியை எதிர் கொள்ள வேண்டும். வெள;வெறு தொழிலாளர்களுக்கு வெள;வேறு சங்கம் எனும் கொள்கையை கைவிட வேண்டும். நிர்வாகத்திற்கு பாகங்கள் விற்கும் தொழிற்சாலைகளுக்கு தனி சங்கம் எனும் கொள்கையையும் எதிர்க்க வேண்டும்.

அப்பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு உங்கள் முயற்சிகளை பற்றி செய்திக்ளை பரப்புங்கள். அதுவும் தொழிற்சாலையின் மேல் உள்ள நிர்பந்தத்தை அதிகரிக்கும்.

தில்லி சந்தார் ஆட்டோமோடிவ் தொழிலாளர்கள்